


# 28.04.2026 செய்திகள்

## நியூசிலாந்தில் இந்தியாவுக்கு புதிய வாய்ப்புகள்

- இந்தியா, நியூசிலாந்து இடையே இருதரப்பு வர்த்தகத்தையும் முதலீட்டையும் அதிகரிக்கும் நோக்கில் எப்.டி.ஏ., எனப்படும் தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தில் இருநாடுகளும் கையெழுத்திட்டுள்ளன.

» ஒப்பந்தத்தின் விபரங்கள்:

- இந்த ஒப்பந்தம், சரக்கு சேவைகள், சுங்க நடைமுறைகள், வர்த்தக எளிதாக்கம், சுகாதார மற்றும் தர நெறிமுறைகள், தகராறு தீர்வு உள்ளிட்ட 20 அத்தியாயங்களை உள்ளடக்கியது.

» இந்தியாவின் பலன்கள்

- ஜவுளி, பிளாஸ்டிக் பொருட்கள், தோல் பொருட்கள், பொறியியல் பொருட்கள் உள்ளிட்ட பெரும்பாலான இந்திய பொருட்களுக்கும் நியூசிலாந்து சந்தையில் 0% சுங்கவரி
- 15 ஆண்டுகளில் கிட்டத்தட்ட 1.88 லட்சம் கோடி ரூபாய் அன்னிய முதலீடு உறுதி
- தகவல் தொழில்நுட்பம், நிதி சேவைகள், கல்வி, சுற்றுலா உள்ளிட்ட துறைகளில் அதிக வாய்ப்பு
- திறமையான இந்தியர்களுக்கு 5,000 விசா ஒதுக்கீடு - 3 ஆண்டுகள் வரை வேலைவாய்ப்பு
- இந்திய மது ஏற்றுமதிக்கு சுங்கவரி விலக்கு

» நியூசிலாந்தின் பலன்கள்

- இந்தியாவில் 70% பொருட்களுக்கு சந்தை அணுகல்
- ஆடு இறைச்சி, மரப்பொருட்கள், நிலக்கரி உள்ளிட்ட பொருட்களுக்கு உடனடி சுங்கவரி விலக்கு
- ஆப்பிள், கிவி, தேன் போன்ற விவசாய பொருட்களுக்கு கட்டுப்படுத்தப்பட்ட சலுகைகள்
- சில கடல் உணவுகளுக்கு 7 ஆண்டுகளில் முழு சுங்கவரி நீக்கம்

» பாதுகாப்பு பிரிவுகள்

- இந்தியா, விவசாயிகள் மற்றும் குறு, சிறு நிறுவனங்களை பாதுகாக்கும் வகையில், பால், காய்கறி, சர்க்கரை, செம்பு, அலுமினியம் உள்ளிட்ட பல துறைகளில் சுங்கவரி சலுகைகளை வழங்கவில்லை.

» முக்கிய வர்த்தக பொருட்கள்

» நியூசிலாந்திற்கு ஏற்றுமதி

- விமான எரிபொருள்
- மருந்துகள்
- மோட்டார் வாகனங்கள்
- பெட்ரோலிய பொருட்கள்
- ஆயத்த ஆடைகள்
- இயந்திரங்கள்

» நியூசிலாந்தியிலிருந்து இறக்குமதி

- மரம், மரப்பொருட்கள்
- ஸ்டீல்
- கம்பளி
- பால் பொருட்கள்
- நிலக்கரி
- விவசாய இடுபொருட்கள்

SURESH'